பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

02 04 2025 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. அரசின் மின்னணு சந்தை தளமான ஜெம் இணையதளத்தில் பதிவு செய்துள்ள முகவர்கள் மூலம் கடந்த நிதி ஆண்டில் பத்து லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருப்பதற்கு பிரதமர் திரு நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.
2. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் வங்கி சேவையில் மேலும் 15 வங்கிகள் இணைக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.
3. வேவ்ஸ் உச்சிமாநாட்டையொட்டி நடத்தப்படும் 'இந்தியாவில் படைப்போம்' போட்டியில் பங்கேற்க 85 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பதிவு செய்துள்ளனர்.
4. இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக்கள் 98 புள்ளி இரண்டு ஒன்று சதவீத அளவுக்கு திரும்பப் பெறப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.
5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்களூரு – குஜராத் அணிகள் மோதுகின்றன.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

அரசின் மின்னணு சந்தை தளமான ஜெம் இணையதளத்தில் பதிவு செய்துள்ள முகவர்கள் மூலம் கடந்த நிதி ஆண்டில் பத்து லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருப்பதற்கு பிரதமர் திரு நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவுக்கு பதிலளித்துள்ள பிரதமர், வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை உறுதி செய்வதில் இந்த அமைப்பு முக்கிய பங்கு வகிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கீழ் நிலை வேலைகளுக்கு பணியமர்த்துவதிலும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் ஜெம் அமைப்பின் பங்களிப்பு அளப்பரியது என்று தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

வக்ஃப் சட்டத்திருத்த மசோதா மக்களவையில் இன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளதாக நாடாளுமன்ற விவகாரங்கள் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் செயய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த மசோதா மீது எட்டு மணி நேரம் விவாதம் நடத்தப்பட உள்ளது என்றார்.

தேவைப்பட்டால் கூடுதல் நேரம் ஒதுக்கவும் அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டதாக அவர் கூறினார்.

மசோதா தொடர்பான அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்க அரசு தயாராக இருப்பதகாவும் அவர் தெரிவித்தார்.

நேர்மையான வெளிப்படையான விவாதம் நடத்த  அரசு உறுதி பூண்டிருப்பதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் தவறாது பங்கேற்க வேண்டுமென்றும் திரு கிரண் ரிஜிஜூ கேட்டுக் கொண்டார்.

வக்ஃப் மசோதா விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட இருப்பதையொட்டி பிஜேபி, தெலுங்கு தேசம், ஐக்கிய ஜனதாதள் உள்ளிட்ட கடசிகள் தங்களது உறுப்பினர்கள இன்று தவறாது அவை நடவடிக்கைகளில் பங்கேற்க வேண்டுமென கொறடா உத்தரவு பிறப்ப்பித்துள்ளன.

காங்கிரஸ் கட்சியும் தங்கள் கட்சி உறுப்பினர்களுக்கு கொறடா உத்தரவு பிறப்பித்துள்ளது.,

இந்த மசோதா மீதான தங்களது நிலைப்பாடு குறித்து காங்கிரஸ், திமுக, திரிணமூல் காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் நாடாளுமன்ற குழு தலைவர்கள் புதுதில்லியில் நேற்று கூடி ஆலோசனை நடத்தினர்.

[]<<<>>>[]

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் வங்கி சேவையில் மேலும் 15 வங்கிகள் இணைக்கப்பட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று திரு மன்சுக் மாண்டவியா முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்த 15 வங்கிகளை சேர்ப்பதற்கான ஒப்பந்தத்தில் வருங்கால வைப்பு நிதி அமைப்பு கையெழுத்திட்டது.,

இதன் மூலம் வருங்கால வைப்பு நிதி சேவைகளை வழங்கும் வங்கிகளின் எண்ணிக்கை 32-ஆக அதிகரித்துள்ளது.

அப்போது பேசிய அமைச்சர், தொழிலாளர்களின் வைப்பு நிதி ஆண்டுக்கு 12 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு இந்த வங்கிகள் மூலம் பட்டுவாடா செய்யப்படும் என்று தெரிவித்தார்.

இதன் மூலம் தொழிலாளர் வைப்பு நிதித் திட்டத்தில் உறுப்பினராக உள்ள எட்டு கோடி தொழிலாளர்களும், 78 லட்சத்திற்கும் அதிகமான ஓய்வூதியதாரர்களும் பயனடைவார்கள் என்றும் திரு மன்சுக் மாண்டவியா குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

கடந்த நிதி ஆண்டில் மூலதன செலவுகள் குறைந்துள்ளதாக முன்னாள் நிதி அமைச்சர் திரு ப சிதம்பரம் தெரிவித்துள்ள தகவல் சரியானதல்ல என மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் இத்தகைய தகவல்கள் தவறான ஒப்பீடுகள் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

நிதி ஆண்டு தொடங்குவதற்கு முன்பே பட்ஜெட் மதிப்பீடுகள் தயாரிக்கப்படுவதாகவும், இந்த மதிப்பீடுகள் செலவினப் போக்கு, நடைமுறைப்படுத்துவதில் மற்றும் முன்னுரிமை பணிகளுக்கு ஏற்ப திருத்திய மதிப்பீட்டில் மாற்றியமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

2024-25 நிதி ஆண்டில் பொதுத் தேர்தல் காலத்தில் அமல்படுத்தப்பட்ட மாதிரி நடத்தை விதிகள், மோசமான பருவநிலை போன்றவற்றின் தாக்கம் மூலதன செலவில் எதிரொலித்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

மாநில அரசுகள் மற்றும் மத்திய அமைப்புகளின் செலவு எதிர்பார்க்கப்பட்டதை விட குறைவாக இருந்ததாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக்கள் 98 புள்ளி இரண்டு ஒன்று சதவீத அளவுக்கு திரும்பப் பெறப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த 2022-ஆம் ஆண்டு மே 19-ஆம் தேதி இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக்கள் புழக்கத்திலிருந்து திரும்பப் பெறப்படுவதாக ரிசர்வ் வங்கி அறிவித்தது.

அந்த காலகட்டத்தில் மூன்று லட்சத்து 56 ஆயிரம் கோடி ரூபாய் அறவிற்கு புழக்கத்தில் இருந்த இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக்களை வங்கியில் டெபாசிட் செய்வதற்கும், மாற்றிக் கொள்வதற்கும் அவகாசம் அளிக்கப்பட்டிருந்தது.

எனினும் ரிசர்வ் வங்கியில் மட்டும் இந்த நோட்டுக்களை மாற்றிக் கொள்ள தொடர்ந்து அவகாசம் அளிக்கப்பட்டு வருகிறது.

**[]<<<>>>[]**

ஒலி ஒளி மற்றும் பொழுதுபோக்கு உச்சி மாநாடான வேவ்ஸ்-யின் ஒரு பகுதியாக நடத்தப்படும் ‘இந்தியாவில் படைப்போம்’ போட்டியில் பங்கேற்க வெளிநாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 100 பேர் உட்பட 85 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பதிவு செய்துள்ளனர்.

32 வகையான பிரிவுகளில் தேர்ந்தெடுக்கப்படும் 750-க்கம் கூடுதலான இறுதி போட்டியாளர்கள் தங்களது தனித்துவமான திறமையை வெளிப்படுத்துவதற்கான வாயபை பெறவுள்ளனர். .

அந்தந்த துறைகளைச் சேர்ந்த முன்னோடிகளுடன் இணைந்து பணியாற்றுவும், குழு விவாதங்கள் மூலம் உலகளாவிய அனுபவங்களை அறிந்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு மும்பையில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி முதல் நான்காம் தேதிவரை நடைபெறவுள்ள வேவ்ஸ் உச்சிமாநாட்டில் வேவ்ஸ் கிரியேட்டர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள் என்றும் தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

வேவ்ஸ் உச்சிமாநாட்டையொட்டி நடத்தப்படும் ஹேக்கத்தான் போட்டியில் சென்னையைச் சேர்ந்த மைண்ட் ஸ்பேஸ் எக்ஸ்-ஆர் குழு இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

தாங்கள் உருவாக்கியுள்ள எக்ஸ்-ஆர் தொழில்நுட்பம் சுகாதாரத் துறையில் முக்கிய பங்கு வகிக்கும் என இந்த குழுவின் உறுப்பினர் தெரிவீத்தார்.

*( சவுண்ட்பைட் - குழு உறுப்பினர் ) ---- 55 செகண்ட்*

[]<<<>>>[]

சென்னை, கோவை உள்ளிட்ட ஒன்பது விமான நிலையங்களில் பயணிகள் தங்களுடன் எடுத்துச் செல்லும் பொருட்களை கையாளும் நடைமுறைகள் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி முதல் மின்னணு முறையில் மேற்கொள்ளப்படும் என மத்திய சுங்க வரிகள் வாரியம் தெரிவித்துள்ளது.

இதன்படி தில்லி, மும்பை, கொல்கத்தா, சென்னை, கோவை, உள்ளிட்ட விமான நிலையங்களிலிருந்து ரத்ன கற்கள் மற்றும் ஆபரணங்கள் ஏற்றுமதிக்கான நடைமுறைகளும், சென்னை பெங்களூரு, ஹைதராபாத், ஜெய்ப்பூர் உள்ளிட்ட ஏழு விமான நிலையங்களில் இந்த பொருட்களின் இறக்குமதிக்கான நடைமுறைகளும் மின்னணு முறையில் மேற்கொள்ளப்படும் என அந்த வாரியம் தெரிவித்துள்ளது.

இதேபோன்று இயந்திரங்கள் ஏற்றுமதி இறக்குமதியிலும் சென்னை உள்ளிட்ட நான்கு விமான நிலையங்களில் மின்னணு முறை கடைபிடிக்கப்படும் என்று அந்த வாரியத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

வாக்காளர் சேர்ப்பு உட்பட தேர்தல் நடைமுறைகளில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கை அரசியல் கட்சிகளிடம் வரவேற்பை பெற்றிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

புதிய தலைமைத் தேர்தல் ஆணையராக திரு கியானேஷ்குமார் பொறுப்பேற்றப்பின், நடத்திய ஆலோசனையின் அடிப்படையில் நாடு முழுவதும் அனைத்து மாநிலங்கள் மற்றம் யூனியன் பிரதேசங்களில் மாநில, மாவட்ட மற்றும் தொகுதி அளவிலான தேர்தல் அதிகாரிகள் அரசியல் கட்சி பிரதிநிதிகளின் கருத்துக்களை கேட்டறிந்தனர்.

இந்த கூட்டங்களில் நாடு முழுவதும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 28 ஆயிரம் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தேர்தல் ஆணையத்தால் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளை எடுத்துரைத்ததாகவும், தேர்தல் நடைமுறைகளை முழுமையாக செயல்படுத்துவது குறித்து அரசியல் கட்சிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்களூரு – குஜராத் அணிகள் மோதுகின்றன.

பெங்களூருவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

நேற்று லக்னோவில் நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப் அணி எட்டு விக்கெட் வித்தியாசத்தில் லக்னோ அணியை வென்றது.

முதலில் பேட் செய்த லக்னோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஏழு விக்கெட் இழப்புக்கு 171 ரன் எடுத்தது.

172 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பஞ்சாப் அணி 16 புள்ளி இரண்டு ஓவரில் இரண்டு விக்கெட்களை மட்டுமே இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் முதலாவது அரை இறுதி ஆட்டத்தில் பெங்களூரு – கோவா அணிகள் மோதுகின்றன.

பெங்களூருவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

***End of News***